செ.வெ.எண் : நாள் : 15.09.16

# பத்திரிக்கைச் செய்தி

விருதுநகர் மாவட்டத்திற்கு, மாநில காசநோய் தடுப்புச் சங்கம், சென்னை மூலம் வழங்கப்பட்ட தலா ரூ.1 லட்சம் மதிப்பிலான மூன்று காசநோய் கிருமிகளைக் கண்டறியக்கூடிய உயர்ரக நூரண்ணோக்கிகளை (LED – Florescent microscope) சிவகாசி, இராஜபாளையம் மற்றும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள், மருத்துவமனை மருத்துவ அலுவலர்களிடம் வழங்கினார்.

இதன் மூலம் மருத்துவமனைகளுக்கு வரும் வெளிநோயளிகளில், காசநோய் அறிகுறிஉள்ளவர்களுக்கு சளிப்பரிசோதனை செய்யவும், காசநோயாளிகளை ஆரம்ப காலத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்து குணமாக்கவும் முடியும், காசநோயை ஏற்படுத்தும் மைக்கோபேக்டீயம் டியுபெர்க்குலோசிஸ் என்ற நூண்ணுயிரியினை மிகவும் எளிதில் கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும்.

இந்நிகழ்வின் போது இணை இயக்குநர் மரு.துரைராஜ், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.பழனிச்சாமி, மரு.கலுசிவலிங்கம், மரு.முத்துவீரலட்சுமி, மரு.அமுதா, துணை இயக்குநர் (காசோநோய்) மரு.நிர்மலாதேவி உட்பட அனைத்து அரசு மருத்துவர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**